**<u>JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU</u>**

**<u>CC No.214/2023</u>**

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw10/Pw4 |
| Name | : பிரதாப்சந்திரன் |
| Father/Husband's Name | : விஜயன் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 42 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20.07.2026.

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது சாலவாக்கம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 03.08.2019 ம் தேதியன்று நான் ஒட்டேரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது காலை 10.00 மணியளவில் புகார் தாரர் ரவிக்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று, நிலைய குற்ற எண்.198/2019 இதச பிரிவுகள் 279, 304(ஏ) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அதசா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. பின்னர் வழக்கின் சம்பவ இடம் சென்று, 03.08.2019 ம் தேதி காலை 11.00 மணிக்கு சாட்சிகள் கங்காதரன் மற்றும் மணிகண்டன் ஆகியோரை முன்னிலையில் சம்பவம் இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தேன். அவை முறையே **அதசா.ஆ.3 மற்றும் 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அன்றைய தினமே காலை 11.30 மணிமுதல்

13.30 மணிவரை குரோம்பேட்டை அரசு மருத்துவமனை சவகிடங்கில் இறந்து போன கனகவள்ளி என்பவரது பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன்.அந்த பிரேத விசாரணை அறிக்கை **அதசா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பிறகு இவ்வழக்கின் சாட்சிகள் 1 முதல் 7 வரை உள்ளோரை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. பின்னர் 06.08.2019 ம் தேதி பகல் சுமார் 12.00 மணியளவில் வழக்கின் எதிரி ராம்குமார் என்பவரை முறைப்படி கைது செய்து நிலையம் கொண்டு வந்து நிலைய பாரா வசம் காவல்படுத்தினேன். பின்னர் அன்றைய தினமே இருநபர் பிணையில் நிலைய ஜாமீனில் எதிரியை விடுவித்தேன். பின்னர் 20.08.2019 ம் தேதி இவ்வழக்கின் பிரேத பரிசோதனை சா்னறை மருத்துவர் பிரியா அவர்களிடம் பெற்று அது சம்மந்தமாக விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **அதசா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 30.08.2019 ம் தேதி விபத்திற்குள்ளான வாகனத்தை வாகன ஆய்விற்கு உட்படுத்தி சான்று பெற்று மோட்டார் வாகன ஆய்வாளர் சீனிவாஸ் என்பவரின் அது சம்மந்தமாக விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அதசா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் பூர்வாங்க விசாரணை முடித்து 30.08.2019 ம் தேதி வழக்கின் எதிரி ராம்குமார் என்பவர் மீது இதச பிரிவுகள் 279, 304(a) ன்படி குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் புகாரை பெறவில்லை என்றாலும், சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து மாதிரி வரைப்படம் மற்றும் பார்வை மகசர் தயார்செய்யவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது

**என்றாலும் சரியல்ல. இழப்பீடு பெறுவதற்காக எதிரிக்கு எதிராக கொடுத்த பொய்யான புகாரை பெற்று தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை இல்லை**

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu